**காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் அலுவலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அலுவலகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அலுவலகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அலுவலகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அலுவலகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக அலுவலகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால்,

நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அலுவலகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க அலுவலகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த அறிக்கையின் வரைவு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,052,909 பற்றாக்குறையாக இருந்துததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 7,445,221 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,392,312 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு பிரயாணச் செலவினம், வழங்கல் மற்றும் பயன்பாட்டுச் செலவினங்கள் மற்றும் சேவை செலவினங்கள் குறைவடைந்தமை என்பன பிரதான காரணமாக இருந்தது.

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தாயரிக்கப்பட்ட போதிலும் 2016 இன் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தல், நிர்வாகம் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் II ஆம் பகுதியின் 10(1) இல் காண்பிக்கப்படுகின்ற பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குரிய பணிகள் எதுவும் இந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்காக செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிப்பதற்கு முடியாதிருந்தது. மேலும் நிறுவனத்தின் இருப்பு தொடர்பாக காணப்பட்ட நம்பிக்கையற்ற தன்மை, குறித்த பதவியணியினரை உரிய காலத்தில் சேர்ப்பதற்கு முடியாதிருந்தமை, சேர்க்கப்பட்ட நிரந்தர பதவியணியினரின் பகுதியொன்று சேவையிலிருந்து விலகிச்சென்றமை என்பன இந்த நிலைமைக்கு காரணமாக இருந்தது. | நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட சகல பணிகளையும் உள்ளடக்கி செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் அலுவலகத்தின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் காணாமல் போனவர்களின் உறவினர்களினால் இடைக்கால அறிக்கையொன்றை பெற்றுக் கொள்வதற்கு 172 கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் 68 குடும்பங்களுக்கு மாத்திரமே அறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்தது. மேலும் ஆரம்பம் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை 24 மாவட்டங்களில் இருந்து கிடைக்கப்பெற்ற 16140 முறைப்பாடுகளில் 9501 முறைப்பாடுகளுக்காக தேவையான நடவடிக்கைகள் | ஆகக் குறைந்த பதவியணியினர் காணப்பட்ட போதிலும் பிரதேச அலுவலகங்களில் 148 ஆரம்ப பரிசோதனைகள் நடாத்தப்பட்டு, காணமுடியாதிருந்தவர் களுக்கு சான்றிதழ்களை விநியோகிப்பதற்காக 68 இடைக்கால அறிக்கையின் எண்ணிக்கையொன்று 2020 ஆம் ஆண்டின் | தேவையான நடவடிக்கைகள் குறித்த காலப்பகுதியில் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | போது விநியோகிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சேவையில் ஈடுபட்டிருந்த உள்ளபடியான பதவியணியனர் 32 ஆக இருந்ததுடன் அதில் 14 பேர் மாகாண அலுவலகங்களில் சேவையாற்றுகின்றனர். மிகுதி 18 உத்தியோகத்தர்களுக்காக மாதமொன்றுக்கு ரூபா 1,864,802 தொகையான அதிக வாடகையொன்றை செலுத்தி கட்டிடம் ஒன்று வாடகைக்கு பெறப்பட்டிருந்ததுடன் தேவையினை மதிப்பீடு செய்யாமல் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 35,089,545 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனி துணைப்பாகங்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும் நிறுவனத்தின் பதவியணியினரின் பிரகாரம் ஒப்பீடும் செய்யும் போது மின்சாரம் பாதுகாப்பு சேவை மற்றும் சுத்திகரிப்பு சேவைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 9,723,655 தொகையான அதிக செலவினம் ஒன்று செலவிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் 2019 திசெம்பர் 04 ஆம் திகதிய 07/2019 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் வெளிப்படுத்தப்பட்டுள்ள அரசாங்க செலவின முகாமைத்துவம் மற்றும் நிதி வினைத்திறனை பேணிச் செல்லல் என்பன பின்பற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | <br>*<br> | 2020/21 ஆம் ஆண்டுகளின் புதிய ஆட்சேர்ப்புக்களுக்கு சமமான வகையில் தேவையான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிய ஆட்சேர்ப்புக்களுக்காக 2019 ஆம் ஆண்டில் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு நேர்முகப்பரீட்சை நடாத்தி ஆட்சேர்க்கும் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் 2020 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தல், கொவிட் தொற்று நோய் நிலைமை மற்றும் ஏனைய நடைமுறை ரீதியான காரணங்களினால் உரிய ஆட்சேர்ப்புக்களில் தாமதம் ஏற்பட்டிருந்தது.<br>* பிரதான அலுவலகம் மற்றும் 04 பிரதேச அலுவலகங்களின் மின்சாரம், பாதுகாப்பு சேவை மற்றும் சுத்திகரிப்பு சேவைகளுக்காக இந்த செலவினம் செலவிடப்பட்டுள்ளது. | முகாமைத்துவ மற்றும் நிதி வினைத்திறனை பேணிச் செல்லல் வேண்டும். |
| (ஈ) | அலுவலகத்திற்காக உத்தியோகத்தர்களை நியமித்து மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் மேலதிக நேரப் படிகளுக்காக ரூபா 30,520,159 செலவினம் ஒன்று செய்யப்பட்டிருந்த போதிலும் | * | நிறுவனத்தின் இருப்பு தொடர்பாக காணப்பட்ட நம்பிக்கையற்ற தன்மை அதன் பிரகாரம் நிரந்தர | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பணிகளை நிழறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | சட்டத்தில் காண்பிக்கப்படுகின்ற பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக திட்டத்தைத் தயாரித்து அமுல்படுத்தாமையின் காரணமாக அலுவலகம் தாபிக்கப்பட்டதால் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களான அதாவது 2016 இன் 14 ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை தாபிக்கும் சட்டத்தின் II ஆம் பகுதியின் 10(ஆ) பிரிவின் பிரகாரம் காணாமல் போன ஆட்கள் தொடர்பான சம்பவங்கள் பற்றி உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக உரிய அதிகாரத் தரப்பினருக்கு பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் 10(இ) பிரிவின் பிரகாரம் சட்டத்தின் ஏற்பாடுகளில் வழங்கப்பட்டுள்ள பிரகாரம் காணாமல் போன ஆட்கள் மற்றும் அவர்களின் உரிமைகள் மற்றும் அது தொடர்பான பாதுகாப்பு போன்ற விடயங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | பதவியணியினரை உரிய காலத்தில் சேர்க்க முடியாதிருந்தமை, சேர்க்கப்பட்ட நிரந்த பதவியணியினரில் காணப்பட்ட நம்பிக்கையற்ற தன்மையின் காரணமாக சேவையிலிருந்து விலகிச் சென்றமை போன்றவை காரணமாக இந்த நிலைமை எழுந்திருந்தது.<br>* ஆணையாளர்களின் ஆலோசனையின் அடிப்படையில் காணாமல் போன ஆட்கள் தொடர்பாக மாவட்ட பதிவேடு தயாரித்து ஊடகங்களின் மூலம் அவற்றை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அடையாள அட்டைகள் கணிசமான அளவு தமிழ் மொழியில் இருந்தமையினால் ஆவணங்களை தயாரித்தல் தாமதமடைந்திருந்தது. | வேண்டும். |
| (உ) | காணாமல் போன ஆட்களின் குடும்பமொன்றிற்கு இடைக்கால நிதி உதவியாக ரூபா 6,000 இனை வழங்குவதற்கு 2019 செப்தெம்பர் 10 ஆம் திகதிய அமப/19/2401/131/022 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 39 நலனாளிகளுக்காக ரூபா 1,993,180 தொகையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 114 நலனாளிகளுக்காக ரூபா 5,568,200 தொகையும் ஆக 2019 திசெம்பர் 31 ஆம் திகதி | ஆகக் குறைந்த பதவியணியினர் காணப்பட்ட போதிலும் பிரதேச அலுவலகங்களில் 148 ஆரம்ப பரிசோதனைகள் நடாத்தப்பட்டு, காணமுடியாதிருந்தவர் களுக்கு சான்றிதழ்களை விநியோகிப்பதற்காக 68 இடைக்கால அறிக்கையின் | கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு உரித்துடைய நலனாளிகளை இணங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| வரையில் ரூபா 7,561,380 தொகையொன்று காணப்பட்ட அமைச்சு நிதி ஏற்பாடுகளில் இருந்து கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு உரித்துடைய நலனாளிகளை இனங்கான்பதற்கு அலுவலகம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எண்ணிக்கையொன்று 2020 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்டிருந்தது. |